**<u>IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR</u>**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 487/2023 |
| நாள் | 09.03.2026 |
| வா.சா.1 | மகாலிங்கம் |
| வயது | 59 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை</u>

எனக்கு சொந்த ஊர் கரூர் ஆகும். என்னுடைய தகப்பனார் அரசாங்கத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றார். பிரதிவாதியை கடந்த 15 ஆண்டுகளாக தெரியும். நான் விவசாயம் மற்றும் தேங்காய் மொத்த வியாபாரமும் செய்து வருகிறேன். அதற்கு நான் ஜி.எஸ்.டி வரி செலுத்திகிறேனா என்றால், இல்லை. நான் வருமானவரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால், இல்லை. பிரதிவாதி கதவு எண்.131, வையாபுரிநகர், 2 வது குறுக்கு தெருவில் குடியிருந்து வருகிறார். பிரதிவாதி வீட்டிற்கு நான் சென்றுள்ளேன். அவரது வீடு தெற்கு பார்த்தாற்போல் அமைந்துள்ளது. பிரதிவாதியின் குடும்ப உறுப்பினர்களை பற்றி எனக்கு தெரியுமா என்றால், பிரதிவாதி குறிப்பிட்டதை வைத்து தான் எனக்கு தெரியும். பிரதிவாதிக்கு ஒரு மகன் மற்றும் மகள் இருப்பதாக கூறினார். பிரதிவாதியின் மனைவியை நான் பார்த்துள்ளேன். பிரதிவாதியின் மனைவியின் பெயர் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் வீட்டிற்கு சுமார் 4 யிலிருந்து 5 முறை சென்றுள்ளேன். நான் பிரதிவாதியின் வீட்டிற்கு கடைசியாக எப்போது சென்று பார்த்தேன் என்று தேதியிட்டு கூறமுடியுமா என்றால் தேதி நியாபகமில்லை. பிரதிவாதி பால் வியாபாரம் செய்து வருகிறார். பிரதிவாதி எந்த முகவரியில் பால் வியாபாரம் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி குடும்ப செலவிற்காக என்னிடம் கடன் வாங்கினார். எந்த செலவு என்று குறிப்பிட்டு

கூறவில்லை. நான் அதை தெரிந்து கொள்ள முயற்சித்தேனா என்றால், குடும்ப செலவு என்று கூறினார். மேற்கொண்டு நான் விசாரிக்கவில்லை. எனது தகப்பனாரும், செல்வராஜ் மற்றும் எனது உறவினர் சுப்பிரமணி ஆகியோர் கூட்டாக சேர்ந்து அம்பிகை பைனான்ஸ் என்ற பைனான்ஸ் நிறுவனத்தை நடத்திவந்தார்களா என்றால், இல்லை. சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக எனது தகப்பனாரும், செல்வராஜ் மற்றும் எனது உறவினர் சுப்பிரமணி ஆகியோர் கூட்டாக சேர்ந்து அம்பிகை பைனான்ஸ் என்ற பைனான்ஸ் நிறுவனத்தை நடத்தி வந்தார்கள் என்றும், மேற்படி பைனான்ஸ் நிறுவனத்திற்கு அருகே வாங்கல் மில்க் செண்டர் என்ற நிறுவனத்தில் பிரதிவாதி பணிபுரிந்து வந்தார் என்றும், அப்போது எனது தகப்பனாரிடம் பிரதிவாதி வரவு செலவு வைத்திருந்தார் என்றும், அவ்வாறு வரவு செலவு வைத்திருந்தபோது, பிரதிவாதியிடமிருந்து பூர்த்தி செய்யப்படாத கையொப்பம் மட்டும் செய்த கடனுறுதிச்சீட்டையும், வீட்டு ஆவணத்தின் நகலையும் எனது தகப்பனாரிடம் கொடுத்து வைத்திருந்தார் என்றால், சரியல்ல. மேற்படி பைனான்ஸ் நிறுவனத்தை வேலுச்சாமிபுரத்தில் உள்ள சுப்பிரமணியன் என்பவர் வீட்டில் வைத்து நடத்தி வந்தார்கள் என்றால், சரியல்ல. பிரதிவாதி கடன் தொகை திருப்பி செலுத்திய பின்பு, எனது தகப்பனார் வெற்று கடனுறுதிச்சீட்டை மட்டும் பிரதிவாதியிடம் கொடுத்து விட்டார் என்றும், கிரய ஆவணத்தின் நகலை பிரதிவாதியின் வசம் கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. மேற்படி அம்பிகை பைனான்ஸ் நிறுவனத்தில் இருந்து செல்வராஜ் என்பவர் விலகிவிட்டார் என்றும், அதன்பின்னிட்டு எனது தகப்பனாரும், சுப்பிரமணியன் என்பவர் மட்டுமே மேற்படி நிறுவனத்தை நடத்தி வந்தார்கள் என்றும், பின்பு சுப்பிரமணியன் என்பவரும் சுமார் 6 மாதங்கள் கழித்து பைனான்ஸ் நிறுவனத்தில் இருந்து விலகிவிட்டார் என்றும், அதனால் எனது தகப்பனார் தொடர்ந்து நடத்த முடியாது என்ற காரணத்தினால் மூடிவிட்டார் என்றால், சரியல்ல. எனது தகப்பனார் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டாரா என்றால், சரிதான். கடந்த 2014ம் வருடம் ஏப்ரல் 30ம் தேதி இறந்துவிட்டார். எனது தகப்பனார் இறந்தவுடன், பிரதிவாதி வீட்டு கிரய

ஆவணத்தின் நகலை என்னிடம் கேட்டார் என்றும், நான் பிறகு தேடி தருவதாக கூறினேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா தாக்கல் செய்த பின்பு தான், இவ்வழக்கின் விவரமே தெரியவந்தது என்றும், பிரதிவாதி என்னிடத்தில் எவ்வித கடன் தொகையும் பெறவில்லை என்றும், தாவா கடனுறுதிச்சீட்டையும் மறுபயனுக்காக நிறைவேற்றி கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. தாவா கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் என்னால் தயார் செய்யப்பட்டவை என்றும், அந்த கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றால், சரியல்ல. தாவா கடனுறுதிச்சீட்டு கடந்த 08.01.2022ம் தேதியன்று என் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. அப்போது, பிரதிவாதியும், நானும் கடனுறுதிச்சீட்டு எழுதிய ராமசுப்பிரமணியன் மற்றும் சாட்சி சதீஸ்குமார் ஆகியோர் உடன் இருந்தோம். மேற்படி மூன்று நபர்களும் என் வீட்டிற்கு காலை 8.00 மணி அளவில் வந்தார்கள். அவர்கள் மூவரும் எவ்வாறு வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் அப்போது வீட்டிற்குள்ளே இருந்தேன். என் வீட்டில் வேறு நபர்கள் இருந்தார்களா என்றால், இல்லை. எனது தகப்பனாரும், தாயாரும் இறந்துவிட்டார்கள். நான் திருமணம் செய்து கொள்ளவிலலை. நான் மட்டும் தான் வீட்டில் வசிக்கிறேன். நான் கடன் கொடுத்த தேதிக்கு 2,3 நாட்களுக்கு முன்பாக பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். அப்போது என்னிடத்தில் தொகை குறைவாக இருந்ததால், நான் தயார் செய்து 2,3 நாட்களில் கொடுப்பதாக கூறினேன். பிரதிவாதி தான் கடனுறுதிச்சீட்டை வாங்கி வந்தார். தாவா கடனுறுதிச்சீட்டில் உள்ள சங்கதிகளை நானும், பிரதிவாதியும் சேர்ந்து கூறினோம். தாவா கடனுறுதிச்சீட்டு நீல நிற மை கொண்ட பேனாவால் எழுதப்பட்டது. தாவா கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதி சந்திரன், ராமசுப்பிரமணியன் மற்றும் சாட்சி சதீஸ்குமார் ஆகிய மூவரும் அவரவர்கள் கொண்டு வந்த பேனாவில் கையொப்பம் செய்தார்கள். பிரதிவாதி சந்திரன் நீல நிற மை கொண்ட பேனாவில் கையொப்பம் செய்தார். ராமசுப்பிரமணியன் என்பவர் நீல நிற இங்க் பேனாவில் கையொப்பம் செய்தார். சாட்சி சதீஸ்குமார் என்பவர் நீல நிற பால்பாய்ண்ட் பேனாவால் கையொப்பம் செய்தார். தாவா கடனுறுதிச்சீட்டை

கையெழுத்து நிபுணருக்கு அனுப்புவதற்கு எனக்கு எதுவும் ஆட்சேபணை இல்லை. காந்திகிராமத்தில், இந்திராகாந்தி நகரில் உள்ள ஒரு மனையை ரூ.7,31,000/–க்கு விற்பனை செய்தேன். மணவாடி கிராமத்தில் 2 மனையை ரூ.3,21,000/–க்கு விற்பனை செய்தேன். மேற்படி விற்பனையில் இருந்து கிடைத்த பணத்தை என்னுடைய வியாபாரத்திற்கு உபயோகம் செய்தேன். எனது வழக்குரையில் மேற்படி விற்பனையில் இருந்து வந்த தொகையை தான் பிரதிவாதிக்கு கடனாக வழங்கியதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால், எனக்கு விற்பனையில் இருந்த கிடைத்த தொகையில் இருந்தும், என்னுடைய வியாபாரத்தில் இருந்து கிடைதத தொகையில் இருந்தும் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். எனக்கு வியாபாரத்தில் இருந்து கிடைத்த வருமானத்திற்கு குறிப்பு ஏதேனும் எழுதி வைத்துள்ளேனா என்றால், இல்லை. நான், பிரதிவாதிக்கு எந்த கடன் தொகையும் வழங்கவில்லை என்றும், பிரதிவாதியின் மறுபயனுக்காக கடனுறுதிச்சீட்டு எழுதி கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. நானும், ராமசுப்பிரமணியன், சாட்சி சதீஸ்குமார் ஆகியோர் கூட்டுசேர்ந்து தாவா கடனுறுதிச்சீட்டை தயார் செய்தோம் என்றால், சரியல்ல. பிரதிவாதி எனது தகப்பனாரிடம் கொடுத்து வைத்திருந்த வீட்டு கிரய பத்திரத்தின் நகலில் இருந்த கையொப்பத்தை வைத்து தாவா கடனுறுதிச்சீட்டு தயார் செய்யப்பட்டதுஎன்றால், சரியல்ல. தாவா கடனுறுதிச்சீட்டு மறுபயனுக்காக ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்பதால், தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால், சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**</u>

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.